**இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் - 2016**

---

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 ஜனவரி 30 ஆந் திகதிய 1-857-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 9.03 ஆம் பிரிவு, IX ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயத் திணைக்களமும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நீர்ப்பாசன உட்கட்டமைப்பின் ஆக்கபூர்வமானதும் நிலைத்திருக்கக்கூடியதுமான முகாமைத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் நீர் மற்றும் காணிகளது உற்பத்தித்திறனின் நிலைத்திருக்கக்கூடிய முன்னேற்றத்தை அடைதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,782.43 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 29.32 மில்லியன் ஆனதுடன், அதில் ரூபா 2,819.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.23 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக, ரூபா 160 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.23 மில்லியன் தனியார் துறை மூலமும் ரூபா 351 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.70 மில்லியன் செயற்திட்டத்தின் பயனாளிகளினாலும் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதனது நடவடிக்கைகளை 2012 சனவரி 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். செயற்திட்டக் கணக்காய்விற்காக இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கான வழிகாட்டல்கள் போன்றவற்றிற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | | பயன்படுத்திய நிதிகள் – மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் – 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடி | 22.23 | 2,819.77 | 7.80 | 1,125 | 7.66 | 1,117.25 | 16,77 | 2,315.00 |
| தனியார் துறை அமைப்புக்கள் பங்களிப்பு | 1.23 | 160.00 | - | - | - | - | 0.01 | 0.58 |
| பயனாளிகள் பங்களிப்பு | 2.70 | 351.00 | - | - | 0.03 | 4.34 | 0.16 | 21.40 |
| இலங்கை அரசாங்கம் | 3.16 | 451.43 | 0.86 | 125 | 0.82 | 118.18 | 1.83 | 249.42 |
| மொத்தம் | **29.32** | **3,782.20** | **8.66** | **1,250** | **8.51** | **1,239.77** | **18.77** | **2,586.40** |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

நிதியளித்தல் உடன்படிக்கையின் 1 ஆம் பட்டோலையின் 4.1(பீ) ஆம் உப பிரிவின் பிரகாரம், வேளாண்மை குளங்கள், மழை நீர் அறுவடை குளங்கள் மற்றும் ஏனைய சிறு கட்டமைப்புக்களின் நிர்மாணம் போன்ற கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் இரணைமடுப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களிற்குமிடையில் மழைநீர் சேமிப்பு நுட்பங்களை முன்னேற்றுவதற்கும் பிரசித்துவப்படுத்துவதிற்குமாக செயற்திட்டத்தால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீது பௌதீக முன்னேற்றம் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டக்காலப்பகுதியின் போது நிர்மாணிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 60 குழுாய்க் கிணறுகள் மற்றும் 20 வேளாண்மை கிணறுகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 48 குழாய்க் கிணறுகள் மற்றும் 18 வேளாண்மைக் கிணறுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தால் மழை நீர் சேகரிப்பு குளங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பௌதீக செயன்முன்னேற்றத்தின் மீதான அறிக்கைகளின் பிரகாரம் கால்வாய், வடிகாலமைப்புக் கால்வாய் வீதிகள் வேளாண்மை மற்றும் குழாய்க் கிணறுகள் உலர் நிலங்கள் மற்றும் நெற்களஞ்சியங்கள் போன்ற நிர்மாண வேலைகள் மீதான ஒப்பந்தங்கள் ரூபா 2,370.56 மில்லியன் கிரயத்தில் 232 பொதிகளின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 287.74 மில்லியன் பெறுமதியான 64 பொதிகளின் கீழான நிர்மாண வேலைகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாதிருந்தது. மேலும், 09 பொதிகளின் கீழான நிர்மாண வேலைகள் 2 ½ மாதங்கள் தொடக்கம் 09 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 05 பொதிகளின் கீழான நிர்மாண ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரர்களின் தவறுகள் காரணமாக பாதியில் கைவிடப்பட்டிருந்தது.

(இ) அரசசார்பற்ற அமைப்பானது பால் அடிப்படையிலான பயிற்சிப் பாடங்களால் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான திறமை அபிவிருத்தி நடவடிக்கைகளை நடாத்துவதற்கு செயற்திட்டத்தால் வாடகைக்கமர்த்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 461 பயிற்சிப் பாடங்களில் 351 பயிற்சி பாடங்கள் நடாத்தப்பட்டிருந்தது என வெளிப்பட்டிருந்தது. மேலும், அதற்காக ரூபா 86.44 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 41.31 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் மிகுதி 03 மாதங்கள் காலப்பகுதியின் போது 110 பயிற்சி பாடங்களை நடாத்தப்படுவதற்காக ரூபா 45.13 மில்லியன் தொகையின் ஒதுக்கீடுகளை பயன்படுத்தும் சாத்தியத்தன்மையானது மிகதொலை துாரத்திலிருந்தது.

(ஈ) கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், இரணைமடு நீர்பாசன முறைமைகளின் கீழான 229 விவசாயிகள் மொத்த நீர் ஒதுக்கீட்டு முறைமை மீதான அனுபவங்களை பகிர்வதற்காக செயற்திட்டத்ததால் ஒழுங்கமைக்கப்பட்ட மஹாவலி ‘‘எச்’’ பிரதேசத்தில் 2015 - 2016 ஆம் ஆண்டின் போதான 06 கள சுற்றுலாக்களில் பங்குபற்றியிருந்தனர். எனினும் ‘‘யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் செயற்திட்டம்’’ என அழைக்கப்படும் ஏனைய செயற்திட்டத்தின் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இரணைமடு குளத்தின் முக்கிய வேலைகள் 2016 திசெம்பர் 31 இலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மொத்த நீர் ஒதுக்கீடு முறைமையின் கீழான நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் விவசாயிகளால் களச் சுற்றுலாவின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட அவர்களுடைய அனுபவங்களை பயன்படுத்த முடியாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட நீர்ப்பாசனம் மற்றும் ஏனைய கட்டமைக்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான சமூக குழுக்களிற்கான பயிற்சிகளை வழங்குவதற்கு ரூபா 2.71 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும், விவசாய ஒழுங்கமைப்புகளால்

புனரமைக்கப்பட்ட பங்கீட்டு முறைமைகள் முறையாக பராமரிக்கப்படவில்லையென களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. ஆகையால் செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட கட்டமைப்புகளின் நிலைபெறும் தன்மை சந்தேசத்திற்குரியதாகவிருக்கின்றது என அவதானிக்கப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குழாய்க் கிணறுகள் மற்றும் வேளாண்மை கிணறுகள் நிர்மாணத்தின் மீதான 05 ஒப்பந்தங்களின் கீழான தளங்களளானது துண்டு நிலங்களின் சுவீகரிப்பு மற்றும் விவசாயிகளின் அமைப்புக்களின் அனுமதியை பெறல் போன்ற காரணங்களால் 02 மாதங்கள் தொடக்கம் 8 ½ மாதங்கள் வரையிலான காலதாமத்துடன் உரிய ஒப்பந்தக்கார்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. என அவதானிக்கப்பட்டது.

(ஆ) வழமையாக செயற்திட்டமானது சிவில் நிர்மாணத்திற்கான அளவீட்டுப் பட்டியலினை அதன் மீது உள்ளடக்கப்பட வேண்டிய பாரிய வேலைகளை உதாசீனம் செய்வதன் மூலம் தயாரித்திருந்தது. வேளாண்மை கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகளின் நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் தெரிவுச் செவ்வை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அடிப் பெறுமதியினை வழங்குவதற்கான மற்றும் ஸ்தாபிப்பதற்கான பாரிய விடயமானது அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 05 குழாய்க் கிணறுகளின் முரண்பாட்டு கட்டளைகளின் கீழ் ஒவ்வொன்றுக்கும் ரூபா 28,135 தொகையான மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2.50 கிலோமீற்றர் நீளமான பரந்தன் பிரதான கால்வாய் வீதியின் வடிகால் முறைமையின் கீழான புனரமைப்பு வேலைகள் 2017 மே 31 இலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எனினும், அதற்கான பூர்த்தியாக்கல் அறிக்கை செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

செயற்திட்டத்தால் பராமரிக்கப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், செயற்திட்ட செயற்பாடுகளின் பிரதேசத்தில் 210 நலனாளிகளிற்கிடையில் ஒவ்வொருவருக்கும் பால் கறக்கும் மாடுகள் பகிரப்பட்டிருந்தது. எனினும் 2017 மே 30 இல் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனை நேரத்தில் கண்டாவனை மற்றும் கரைச்சி பிரதேச செயலக பிரதேசத்தில் வசிக்கும் 04 நலனாளிகள் தங்களுடைய பெயர்கள் செயற்திட்டத்தின் பதிவேடுகளில் மாடு பெறுவனவர்களாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் பால்கறக்கும் மாடுகளை பெற்றிருக்கவில்லை என குறிப்பிட்டிருந்தனர்.

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

2012 இல் அனுமதிக்கப்பட்ட 16 அலுவலர்களை உள்ளடக்கியிருந்த செயற்திட்டத்தின் பதவியணியானது 04 தடவைகள் திருத்தியமைக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட காலப்பகுதியின் மிகுதி கட்டங்களில் 82 அலுவலர்களின் புதிய பதவியாணையை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் நடவடிக்கைகளானது செயற்திட்ட காலப்பகுதியின் போது மனித வளங்களின் உண்மைத் தேவைகளை மதிப்பிடாமல் செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்டிருந்ததென சான்றுறுதிப்படுத்தியிருந்தது. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் ரூபா 125,000 மாதாந்த படியில் 2016 ஆகஸ்ட் 01 இலிருந்து நிதி ஆலோசனையாளர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.

.